Crl.Misc.39

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.530/2024**
**Preliminary Register :**
**Police Station : Neelangarai PS**

**Deposition of witness for : LW1/PW1**
**:**

**Name :** பாப்பா
**க/பெ.பலவேசம்**
**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.05.2026**
**(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

**(அரசு தரப்பில் முதல் விசாரணை இல்லை என்பதால் முதல் விசாரணை முடிக்கப்படுகிறது)**

<u>முதலாவது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. கையெழுத்து மட்டும் போட தெரியும். நான் கொடுத்த புகார் மனுவை எனது மருமகன் மணிகண்டன் தான் எழுதினார். எனக்கு அந்த புகாரில் உள்ள விவரம் படித்துக் காண்பித்தார்கள். எதிரிகள் நகை ஃபண்டு மற்றும் பணம் 3000 கட்டினால் 6000 ஆக தருவதாக கண்டுபிடித்தார்கள். மொத்தம் 126 சீட்டு போட்டேன். அதில் மாதம் ஆயிரம் என்று 12 மாதங்கள் கட்டினால் அடைப்போம். தங்கம் தருவதாக சொன்ன சீட்டும் மற்றும் மாதம் ரூபாய் 350

செலுத்தினால் 12 மாதங்கள் கழித்து 6000 தருவதாக சொன்ன சீட்டும் ஆக மொத்தம் 126 சீட்டு நானும் என் உடன் இருந்தவர்களும் செலுத்தினோம். 126 நபர்களும் எனக்கு தான் தெரியும். எதிரிகளுக்கு தெரியாது என்றால் சில நபர்களை எதிரிகளுக்கு தெரியும். 126 நபர்களின் பெயர்களும் போலீஸ் விசாரணையில் குறிப்பிட்ட உள்ளனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். 126 நபர்களின் பெயர்களை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் நான் பணிபுரிந்த பள்ளியின் ஆசிரியர்கள் சிலர் சிலர் பெயர்களை எனக்கு தெரியாது. 126 நபர்களையும் போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் விசாரணை செய்தனர். 126 நபர்களிடம் பணத்தை நான் தான் வசூல் செய்தேன் என்றால் பள்ளியில் பணி புரியும் அனைவரிடம் 10 தேதியில் சம்பளம் வரும் பொழுது வசூல் செய்தேன்.

2. எந்த மாதத்தில் இருந்து எந்த மாதம் வரை சீட்டு பணம் கட்டினேன் என்றால் ஏழு வருடங்கள் ஆனதால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. ஒன்பது தேதிக்குள் யார் யார் பணம் கொடுக்கிறார்களோ அன்றைய தேதியே எதிரியிடம் ஒப்படைத்து விடுவேன். அதை அவர் கார்டில் டிக் செய்து கொடுப்பார். எப்பொழுதும் 10 தேதி அல்லது 12 தேதிக்குள் மொத்த பணத்தையும் கொடுத்து விடுவேன். எதிரிகளிடம் நான் 12 மாதம் செலுத்திய மொத்த தொகை எவ்வளவு என்று எனக்கு கணக்கு பண்ண தெரியாது. இரண்டு லட்சம் பணம் திரும்பி கொடுத்தார்கள். மீதி பணம் 7,50,000 தர வேண்டும். ஜெனிஃபர் எனும் ஆசிரியருக்கு ரூபாய் அறுபதாயிரம் திருப்பி கொடுத்தார். ANNA பள்ளி ஆசிரியருக்கு முப்பதாயிரம் பணம் கொடுத்தார். ரேஷ்மா என்பவருக்கு 18,000 கொடுத்தார். இரண்டு லட்சத்தில் மற்றவர் யாருக்கு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. அவருக்கு எப்பொழுது திரும்ப கொடுத்தார்கள் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை எனது மகனுக்கு தெரியும்.

(2. 45 மணிக்கு உணவு இடைவெளிக்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)
(மீண்டும் 3:20 மணிக்கு குறுக்கு விசாரணை தொடங்கப்படுகிறது)

3. அந்த 126 சீட்டு அட்டை நீல நிறத்தில் இருக்கும். அந்த அட்டையில் யார் பெயர் இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் பணத்தை வசூலித்து கொடுக்கும்பொழுது அதில் டிக் மட்டும் தான் செய்வார்கள் என்றாலும் கையெழுத்து போட மாட்டார்கள் என்றால் சரியல்ல. டிக் செய்து கையெழுத்து செய்வார்கள். அந்த கையெழுத்தை காமாட்சி என்பவர் தான் செய்வார். நான் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கடனாக கொடுத்தேன் என்றாலும் திருவான்மியூர் டிப்போவில் பணிபுரியும் மதுரைவீரன் என்பவரிடம் இருந்து கடனாக பெற்று கொடுத்தேன். அதற்கு 5% வட்டி ஆகும். அதற்காக நான் ஏதேனும் ஆவணம் எழுதிக் கொடுத்தேன் என்றால் இல்லை. காமாட்சிக்கு கடனாக கொடுத்ததற்கு ஏதேனும் ஆவணம் எழுதி வாங்கினேன் என்றால் இல்லை. நான் காமாட்சி வீட்டில் எதிர் வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான்.

4. இரண்டாவது எதிரி பியாரிஜான் காமாட்சி வீட்டில் வாடகைக்கு இருந்தார் என்றால் சிறிது காலம் இருந்தார். நான் பள்ளியில் துப்புரவு தொழிலாளராக வேலை செய்த பொழுது எனக்கு மாதம் ஒன்பதாயிரம் சம்பளம் ஆகும். நான் தற்பொழுது வேலை செய்கிறேன் என்றால் இல்லை. எதிரியிடம் தவிர வேறு யாரிடமும் சீட்டு கட்டியது இல்லை. எனக்கு சொந்தமாக தளம் போட்ட வீடு உள்ளது. மூன்று மாடி உள்ள வீடாகும். இந்த வீடு தவிர வேற எந்த வீடும் இல்லை. அந்த வீட்டின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 126 நபரிடம் நான் தான் பணத்தை வசூல் செய்தேன். அதில் கையாடல் செய்து வீட்டை கட்டி உள்ளேன் என்றாலும் அதை அவர்கள் கேட்ட பொழுது எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல . பியாரிஜான் காமாட்சி வீட்டில் குடி இருந்தார்கள். அவருக்கு வேறு எங்கு

வீட்டில் உள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அவர் காமாட்சியுடன் சிறிது காலம் இருந்தார். போலீஸ் விசாரணையில் பியாரிஜானின் முகவரி சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் இரண்டு அல்லது மூன்று முறை என்னை விசாரணை செய்தனர். எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. புகார் கொடுத்த பின்பு விசாரணை செய்தனர். 126 நபரிடம் நான் வசூல் செய்ததால் நான் தான் திரும்ப செலுத்த வேண்டும் என்றாலும் அதற்கு பொறுப்பு நான் தான் என்றாலும் காமாட்சிக்கும் பியாரிஜானுக்கும் எந்த பொறுப்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் பணத்தை வாங்கி எதிரியிடம் தான் கொடுத்தேன். அவர்கள் தான் பொறுப்பு. போலீசார் என்னை மூன்று தடவை விசாரணை செய்தார்கள்.

6. எத்தனை முறை என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இரண்டு அல்லது மூன்று முறை கையொப்பம் செய்தேன். நீதிமன்றத்தில் சாட்சி அளித்தபடி தான் போலீசாரிடம் விசாரணையில் தகவலை கூறினேன் என்றால் சரிதான். நான் தரவேண்டிய பணத்திற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அடுத்தது, அந்த பொய்யான புகாருக்கு ஆதரவாக தான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எதிரிகள் பெயரில் வேறு ஏதேனும் வழக்கு உள்ளதா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

<u>இரண்டாவது எதிரித் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. புகார் கொடுத்தேன் என்றாலும் அந்த புகாரை எப்பொழுது கொடுத்தேன் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. புகாரில் தேதி மாதம் வருடம் எதுவும் எழுதவில்லை என்றால் எனது மருமகன் எழுதி கொடுத்தார். இந்த புகாரை எனது மருமகன் தான் எழுதினார் என்பதை நிரூபிக்க எனது மருமகனை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். அக்டோபர் மாதம் 2018 இல் இருந்து ஒரு வருடம் சீட்டு

கட்டி உள்ளதாக புகார் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அக்டோபர் மாதம் 2019 ஆம் தேதி சீட்டு பணம் முடிந்திருக்க வேண்டும் என்றால் சரிதான். 2019 அக்டோபர் மாதம் பணம் செலுத்திய பின்பு எத்தனை மாதங்கள் பணம் அவரிடம் கேட்டேன் என்றால் ஆறு மாதங்கள் மேல் கேட்டேன். ஆறு மாதங்கள் பணம் கேட்ட பொழுது கொடுத்தேனா என்றால் பணம் செலுத்த பின்பு ஒரு மாதத்தில்1, 50,000 ஆயிரம் பணம் கடனாக வாங்கி கொடுத்தேன். 1, 50,000 பணம் கொடுக்கும் அளவுக்கு நான் வசதியான ஆள் என்றால் நான் வட்டிக்காக பணம் வாங்கி கொடுத்தேன். இரண்டு லட்சத்தி சில்லரை பணமாக திரும்ப கொடுத்தார். 1, 50,000 வட்டி வாங்கி கொடுத்த பின்பு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கழித்து 2 லட்சத்து சில்லரை பணமாக கொடுத்தார்.

2. சீட்டு கட்டி ஆறு மாதங்கள் நான் பணம் கேட்டு அதன் பின்பு நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு நான் புகார் கொடுத்தேன் என்றால் அது பொய் புகார் என்றால் சரிதானா என்றால் சரிதான். 7.12.2019 அன்று யாரேனும் புகார் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். காமாட்சியிடம் மாத மாதம் சீட்டு பணம் கட்டியதற்கு ஆவணங்களோ சாட்சிகளோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் புகார் கொடுத்து உள்ளேன் பணம் கட்டிய கார்டு தான் உள்ளது வேறு ஆவணம் ஏதுமில்லை. சீட்டு பணம் கட்டியிருக்கும் 1, 50,000 பணம் கொடுத்ததற்கும் என்னிடம் கையிருப்பு பணம் இருந்ததை நிரூபிப்பதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். காமாட்சி 1, 50,000 கடனாக பெற்றதற்கும் அவர் திருப்பி செலுத்திய 2,00,000 பணத்திற்கும் ஆவணம் ஏதேனும் என்னிடம் இல்லை என்றால் எனது மருமகன் எழுதி வைத்துள்ளார்.

3. எனது மருமகன் எழுதி வைத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் புகார் கொடுத்துள்ளேன். ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. அதுபோல் ஒரு ஆவணமே இல்லை, அதனால்

தான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அப்படி ஒரு ஆவணம் இருந்திருந்தால் போலீஸ் விசாரணையில் கொடுத்து இருப்பேன் என்றால் போலீசாரிடம் கொடுத்துள்ளேன். பொதுவாக சீட்டு பணம் கட்டிய பின்பு அதை திருப்பி தராத பொழுது மேலும் 1, 50,000 பணமாக கேட்டால் கொடுக்க மாட்டார்கள் என்றால் எனக்கு உண்டான பணத்தை செட்டில் செய்து விடுவதாகவும் புதிதாக கார்டு போட்டு உள்ளேன். அந்த பணம் வந்தவுடன் நீங்கள் பிடித்த சீட்டுக்கு மற்றவர்களுக்கு பணத்தை பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியதால் கொடுத்தேன்.

4. நான் சீட்டு பணம் போட்டது அனைத்தும் காமாட்சி இடம் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். 1, 50,000 காமாட்சி கடனாக தான் கேட்டார் என்றால் சரிதான். அந்த 1, 50,000 காமாட்சி 30,000 தான் அதில் கொடுத்தார். இரண்டு லட்சத்து சில்லறை பணம் கொடுத்ததாக சொல்லியிருந்தால் பொய் என்றால் சரியல்ல. அந்த பணம் சீட்டு கட்டுவதற்காக கொடுத்தது. இந்த ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரத்திற்கு 30 ஆயிரம் தான் கொடுத்தார். பியாரிஜான் என்பவரிடம் நான் எந்த பணமும் கொடுக்க வில்லை என்றால் அவர் யாரென்று எனக்கு தெரியாது. 126 நபர்கள் பணம் கட்டியதாக சொல்பவரின் பெயர்களை காவல் நிலையத்தில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். எனது புகாரில் குறிப்பிட்டு யார் யாருக்கு எவ்வளவு பணம் ஏமாற்றி உள்ளதாக குறிப்பிட்டு உள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளது.

5. யார் யாருக்கு எவ்வளவு பணம் ஏமாற்றி உள்ளார்கள் என்று குறிப்பிடாமல் புகார் கொடுத்து இருந்தால் அது நான் கொடுத்த புகார் இல்லை என்றால் தனிப்பட்ட முறையில் புகாரில் தெரிவிக்கவில்லை. யார் யார் எவ்வளவு ஏமாற்றி உள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளது. சாட்சி எந்த பதிலும் அளிக்கவில்லை. 25 கார்டு பிடித்துக் கொடுத்தால் ஒரு கார்டு இலவசம் என்று காமாட்சி தான் என்னிடம் கூறினார். இந்த புகார் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட 126

நபரும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 126 கார்டு சேர்த்து விட்டு உள்ளேன். தோராயமாக 15 நபருக்கு மேல் தான் இருப்பார்கள். இதற்கு முன்பு சாட்சியத்தில் 126 நபர்கள் தெரியும் என்று சாட்சி முடித்துவிட்டு தற்பொழுது 126 நபர்கள் யார் யார் என்று கேட்ட பொழுது 126 நபர்கள் கிடையாது. 126 கார்டு என்று பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பணம் பரிவர்த்தனை அனைத்தும் காமாட்சி இடம் மட்டும் தான் என்றால் சரிதான். வேற யாரிடமும் இல்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து பணம் பறிக்க வேண்டி போலீசாருடன் சேர்ந்து கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>. இல்லை

**Sd/-M.N.**ராஜநந்திவர்மசிவா**,**
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்**,**
சோழிங்கநல்லூர்**.**